அரசு தலைமை மின் ஆய்வாளர் அலுவலகம்,
திரு.வி.க.தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-32.

அரசு தலைமை மின் ஆய்வாளர் அவர்களின் செயல்முறை ஆணை
அளிப்பு: திரு. ஞா. ஜோசப் ஆரோக்கியதாஸ், பி.இ., எம்.பி.ஏ.

*****

**செ.மு.ஆ. எண். 25221/இ2/2023** நாள்: 17.10.2023

பொருள்: பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதி – 2020-21, 2021-22 மற்றும் 2022-23-ஆம் ஆண்டுகளுக்கான தொகுதி IV தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்கள் – பணி வரன்முறைப்படுத்துதல் – ஆணை வழங்கப்படுகிறது.

பார்வை:
1. செயலர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய க.எண். 1947/PSD-D1/2023, நாள் 18.8.2023 (25.8.2023 அன்று பெறப்பட்டது).
2. அதமிஆ-ரின் செ.மு.ஆ.எண்.25221இ2/2023, நாள் 7.9.2023.

******

**ஆணை:**

பார்வை 1-ல் கண்ட கடிதத்தின்படி இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்வரும் நபர்கள் பார்வை 2-ல் குறிப்பிட்டுள்ள செயல்முறை ஆணையின்படி இளநிலை உதவியாளர்களாக தற்காலிகமாக நியமிக்கப்பட்டு அவர்களுக்கெதிரே குறிப்பிட்டுள்ள அலுவலகங்களில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகின்றனர்.

| வ. எண். | பெயர் | பணியில் சேர்ந்த நாள் | தற்போது பணிபுரியும் அலுவலகம் |
|---|---|---|---|
| 1. | திரு. நா. கார்த்திக் | 13.9.2023 மு.ப. | அரசு தலைமை மின் ஆய்வாளர் அலுவலகம் |
| 2. | திரு. ரா. வெங்கடேஷ் | 13.9.2023 மு.ப. | மின் ஆய்வாளர் அலுவலகம், அம்பத்தூர் |
| 3. | திருமதி. கு. ஜெயந்தி | 13.9.2023 மு.ப. | மின் ஆய்வாளர் அலுவலகம், கடலூர், |
| 4. | திரு. செ. பிரதீப் | 20.9.2023 மு.ப. | மின் ஆய்வாளர் அலுவலகம், சென்னை (தெற்கு) |
| 5. | திரு. ஏ. தங்கராஜ் (பண்டக காப்பாளர்-பிணையம்) | 13.9.2023 மு.ப. | அரசு தலைமை மின் ஆய்வாளர் அலுவலகம் |

| | | | |
|---|---|---|---|
| 6. | திருமதி. வ. முத்துப்ரியா | 20.9.2023 மு.ப. | அரசு தலைமை மின் ஆய்வாளர் அலுவலகம் |
| 7. | செல்வி. ச. முத்துலெட்சுமி | 20.9.2023 மு.ப. | மின் ஆய்வாளர் அலுவலகம், ஈரோடு |
| 8. | செல்வி. ரா. அபர்ணா | 13.9.2023 மு.ப. | மின் ஆய்வாளர் அலுவலகம், செங்கல்பட்டு |

மேற்குறிப்பிட்டுள்ள 8 இளநிலை உதவியாளர்களின் பணி அவர்கள் பணியில் சேர்ந்த தேதி முதல் வரன்முறை படுத்தி ஆணை வழங்கப்படுகிறது.

இளநிலை உதவியாளர் பதவியில் இவர்கள் மூன்றாண்டு தொடர்பணிக் காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் இருப்பார்கள் எனவும் தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் இளநிலை உதவியாளருக்கான அடிப்படைப் பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

மேலும், இந்த பணிவரன்முறையானது தொகுதி IV பணி நியமனம் (அறிவிப்பு எண். 07/22, நாள் 30.3.2022) குறித்து உயர்நீதி மன்றம் சென்னை மற்றும் மதுரை கிளையில் நிலுவையில் உள்ள வழக்குகளின் இறுதி தீர்ப்புக்கு உட்பட்டதாகும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

(ஒம்.) திரு. ஞா. ஜோசப் ஆரோக்கியதாஸ்,
அரசு தலைமை மின் ஆய்வாளர்.

/உண்மை நகல் அனுப்பப்படுகிறது/

18/10/2023
ஆட்சி அலுவலர்.

பெறுநர்: சம்மந்தப்பட்ட பணியாளர்கள் கட்டுப்பாட்டு அலுவலர்கள் மூலமாக

நகல் செயலர்/ தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை –3

நகல் முதுநிலை மின் ஆய்வாளர்/கோவை.

நகல் மின் ஆய்வாளர்/அம்பத்தூர்/ கடலூர்/சென்னை (தெற்கு)/ஈரோடு/ செங்கல்பட்டு

நகல் இருப்புக் கோப்பு.

மே.கோ.(ஆர்.சா.)/18.10.2023/

மின் ஆய்வாளர்,
கடலூர்.